1978 மார்ச் 6]

சிதம்பரத்தில் பேருந்து நிலையம்

*வினு 412 திரு. துரை கலியமூர்த்தி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட விளுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரத்தில் பேருந்து நிலையம் கட்ட அரசு கடன் வழங்கியுள்ளதா?

(ஆ) இதுவரை கொடுக்கப்பட்டது எவ்வளவு?

(இ) கொடுப்பதாக உத்தேசிக்கப்பட்டது எவ்வளவு?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) ஆம்.

(ஆ) ரூ. 3,24,000.

(இ) மதிப்பீட்டுத் தொகையான ரூ. 10,65,000-ல் நகராட்சி நிதியிலிருந்து செலவு செய்யப்பட்டுள்ள தொகை ரூ. 3,66,000-ம் அரசு வழங்கிய கடன் ரூ. 3,24,000-ம் போக மீதித்தொகையான ரூ. 3,75,000 அளிக்குமாறு நகராட்சி கோரியுள்ளது. இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

Tap rates in Tiruchirappalli.

*Q. 413.—Thiru R. Umanath: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether any representation regarding raising drinking water tap rates by the Tiruchirappalli Municipality from April 1977 has been received; and

(*b*) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) ஆம்.

(ஆ) திருச்சிராப்பள்ளி நகராட்சியின் நிதி நிலையைக் கருதி பழைய வீதத்திலேயே தண்ணீர் கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

திரு. எஸ். ஆர். இராதா: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தண்ணீர் கட்டணத்தை பழைய நிலையில் வைத்துக்கொள்வது குறித்து உள்ளபடியே நன்றியைச் செலுத்த வேண்டும். ஆனல் சில நகராட்சிகளிலே வியாபார ரீதியிலே தண்ணீர் கட்டணத்தை உயர்த்த அரசு உத்திரவிட்டு இருக்கிறது, கும்பகோணம்